**உடதும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017மார்ச்29 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 04 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உடதும்பரபிரதேச சபையின்2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் அபிவிருத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,424,216 ஆன செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லாததுடன்,ரூபா 42,160,398 பெறுமதியான பற்செயல் கட்டிடம், பிரதேச சபைக்கு சொந்தமான 7 காணி மற்றும் மடமொன்றின் பெறுமதியை மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான மடங்களாக ரூபா 775,000 ஆன பெறுமதிகணக்கிடப்பட்டிருந்த போதிலும்,அவற்றின் பெரும்பான்மையானவை அழிந்திருந்தன.

(இ) மீளாய்வாண்டில் கிசெம்பர் 31 திகதியில் சபைக்கு சொந்தமாக இருந்த ரூபா 250,000 பெறுமதியான 2 இயந்திரம் மற்றும் பெறுமதி இனங்காணப்படாத பிரதிஎடுக்கும் இயந்திரமொன்றும்நிதிக்கூற்றுக்களில்உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 19,466 கொடுத்த கழிவு மற்றும் ரூபா 30,000 ஆன கணக்காய்வுக்கட்டணம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் 3 மாதங்களுக்கான ரூபா 1,058,700 முத்திரை கட்டணத்தை மாத்திரம் கணக்கிடப்பட்டிருந்த போதிலும்,வருடத்திற்குரிய முத்திரை கட்டண வருமானம் மற்றும் பெற வேண்டிய முத்திரை கட்டணம் மதிப்பீட்டு அடிப்படையில் அல்லது கணிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 3,900,000 ஆன மூலதன வருமானம் மற்றும் ரூபா 3,396,941 ஆன மூலதன செலவினம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---------------------------------------------------------------------------------------------------------

(அ) **பெற வேண்டிய கணக்குகள்**

---------------------------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதிரூபா 18,843,253 ஆனதுடன், அவற்றில் 1-5 இடையிலானகாலத்தை விஞ்சியிருந்த பெறுமதிரூபா 1,776,654 மற்றும் 5 வருடத்தை விஞ்சிய மீதி ரூபா 1,575,429ஆனது.

(ஆ) **செலுத்த வேண்டிய கணக்குகள்**

-------------------------------------------------------

மீளாய்வாண்டின்திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதிரூபா 20,070,495 ஆனது. அவற்றில் ஆண்டு 1-5 இடைப்பட்ட காலத்தில் தீர்க்கப்படாத மீதிரூபா 2,064,826 மற்றும் 5 வருட காலத்தை விஞ்சியமீதிரூபா 94,850 ஆனது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

--------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 10,664,417 ஆன கொடுக்கல் வாங்கல்களைகணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றாய்வு செய்வதற்கு இயலாமலிருந்தது

**1.3.4 சட்டங்கள், விதிகள்மற்றும்பிரமாணங்களுடன் இணங்காமை**

---------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன்இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்புகள்** | **இணக்கமின்மை** |
|---|---|---|
| | -------------------------------------------------------- | -------------------- |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவு | சபைக்கு சொந்தமான 99 சொத்துக்களுக்கானஉரிமைதொடர்பான ஆவணங்கள்பெறப்பட்டிருக்கவில்லை. |
| | | |
| (ஆ) | 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்கமுடைய சட்டங்களினூடாக திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க இலக்கம் 1533/16 கொண்ட 2008 ஜனவரி 25 திகதிய அதி விஷேட வர்த்தமானி. | ஆதிகார எல்லையில் உள்ள புகையிலை உழர்த்தும் வேலை மற்றும் நெல் அரைக்கும் ஆலைகள் உள்ளடங்களாக 21 வேலைகளுக்கான அனுமதிபத்திரம் வழங்கப்பட்டிருக்காததுடன்,அதன் காரணமாக சபைக்கு ரூபா 92,400 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானமீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,687,105 ஆனதுடன், அதற்கு நேரொத்தமுன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,973,207 ஆனமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 713,898 ஆன வளர்ச்சி காட்டப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகளில் ரூபா 713,898 ஆன வளர்ச்சிக்கு குத்தகை வாடகை வருமானம் ரூபா 445,505 தொகையும், அனுமதி பத்திரக் கட்டணம் ரூபா 259,590 தொகையும் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 284,640 ஆன தொகையும் அதிகரித்தமைபிரதானமாக தாக்கம் விளைவித்திருந்தது.

### 2.3 செயற்பாட்டு மூலதன முகாமை

மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய 2 ஆண்டுகளில் மொத்த நடைமுறை சொத்துக்கள் மற்றும்மொத்த நடைமுறை பொறுப்புக்கள் இடையில் விகிதம் முறையே 1.5:1 , 1.2:1 மற்றும்1.7:1 ஆனது.

### 2.4 வருமான நிருவாகம்

#### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பிரதேச சபைக்கு இயந்திர உபகரண அலகு ஒன்றை நிருவுவதற்கு பெற்றுக்கொடுத்த இயந்திரங்களின் மூலம் வருமானத்தை வளர்த்துக்கொள்வது தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.4.2 வீத வரி

(அ) மீளாய்வாண்டுஆரம்பத்தில் ரூபா 279,764 ஆன நிலுவை மீதியின் வருடத்தினுள் 64 சதவீதமான அளவேஅறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வீத வரி மீதி ரூபா 211,993 ஆனதுடன், அம் மீதினுள் 1-5 வருடக் காலத்திற்கு இடையிலானரூபா 12,466 ஆன மீதி ஆனது.

#### 2.4.3 ஏனைய வருமானம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) வாடகை வண்டி மற்றும் முச்சக்கர வண்டிக் கட்டணம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை வாடகை வண்டி மற்றும் முற்சக்கர வண்டிக் கட்டண மீதி ரூபா 223,500 ஆனதுடன், அம் மீதினுள் 1-5 வருட காலபகுதியில் இருந்து அறவிடவேண்டிய ரூபா 87,000 ஆன மீதியும் காணப்பட்டது.

**(ஆ) டெக்டர் மற்றும் பவுசர் வண்டி மூலம் சேவை வழங்குதல்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய ரூபா 66,700 ஆன நிலுவை மீதியின் ஆண்டினுள் ரூபா 700 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**(இ) ஏக்கர் வரி**

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்திலான ரூபா 200,334 ஆன நிலுவை மீதியின் ஆண்டினுள் ரூபா 6,678 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவையின் 3 சதவீதமாகும்.

(ii) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 197,257 ஆனது. அம் மீதிக்கு 1-5 வருட இடைப்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 45,672 மற்றும் 5 வருடத்திறகு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 147,967 ஆன மீதி உள்ளடங்கியிருந்தது.

**(ஈ) நீர் கட்டணம்**

மீளாய்வாண்டு ஆரம்பத்திலான ரூபா 919,103 நிலுவை மீதியில் ஆண்டின் போது ரூபா 511,309 ஆன பணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவையின் 55 சதவீத பெறுமானம் ஆனது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 686,843 ஆனதுடன் அம் மீதியினுள் 1-5 வருட காலத்தை விஞ்சிய ரூபா 404,108 ஆன மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(உ) கடைவாடகை**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிலுவை கடை வாடகை மீதி ரூபா 83,430 ஆனதுடன் அம் மீதியினுள் 5 வருடத்தை விஞ்சிய ரூபா 20,830 ஆன அறவிட வேண்டிய மீதி நிலவியது.

### 2.4.4 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை கட்டணம்

(அ) மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப் பணமாக ரூபா 1,369,132 ஆன தொகை அறவிடப்படவேண்டி இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டுஇறுதியில் நிலவிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 1,151,890 ஆனதுடன் அம் மீதியினுள் 5 வருடத்தை விஞ்சிய ரூபா 11,000 மற்றும் 1-5 வருட காலத்திற்குறிய ரூபா 619,740 உம் ஆனது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபை அதிகார எல்லையில் மக்களின் பொது வசதிகளை மேம்படுத்துவது பிரதேச சபை மூலம் நடைபெற வேண்டிய பிரதான செயலொன்றான போதும் கால்வாய் சுத்தம் செய்தல், நகரை சுத்தமாக வைத்துகொள்ளல் தொடர்பில் சபையின் விஷேட கவனம் செலுத்தப்பட்டிருக்ககவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 24,383,416 ஆன மீண்டுவரும் வருமானத்தில் எத்தொகையும் பிரதேச அபிவிருத்திக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 ஆண்டில் புரனெகும(நகர அபிவிருத்தி) கருத்திட்ட ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 42,160,398 செலவில் நிர்மானிக்கப்பட்ட பற்செயல் கட்டிடத்தில் 4,870 சதுர அடி அளவு குறை பயன்பாட்டில் நிலவியது.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையின் 10 பதவிகளில் 21 வெற்றிடங்கள் நிலவிய போதும் அவ் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகார எல்லைக்குள் செயற்படும் 3 நீர் விநியோகத்திட்டங்களின் நீர் பாவணையாளர்களின் எண்ணிக்கை 518 ஆனதுடன் அதில் 418 க்கு மாத்திரமே நீர்மாணிகள் பொறுத்தப்பட்டிருந்தன.

(இ) 1982 ஆண்டில் அபிவிருத்தி சபை நிலவிய காலத்தில் குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த 13 கடைஅறைகளின் புதிய மதிப்பீடுகளின் பிரகாரம் புதிய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

பிரதேச சபைக்கு சொந்தமான டிரம்ப் ட்ரக் வண்டி, தனி அதிர்வு இயந்திரம்,பகோ லோடர் மற்றும் நீர் பவுசர் என்பவைகளை சேவையில் ஈடுபடுத்தி வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான டிரக்டர் மற்றும் 2 மோட்டார் சைக்கிள்களை பழுதுபார்ப்பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 இனங்கண்ட நட்டங்கள்

2015 திசெம்பர் 31 நடாத்தப்பட்ட கணிப்பீட்டுச் சபை அறிக்கையின் பிரகாரம் 19 வகைகளில் 43 அலகு பொருட்களின் பற்றாக்குறை நிலவிய போதும் இப் பற்றாக்குறை தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 ஒப்பந்த நிருவாகம்

2016 ஆண்டு பிரதேச சபை வழுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திஸ்ஸ அத்தநாயக கேட்போர் கூடத்தை பழுதுபார்ப்பததற்கு ரூபா 1,800,000 ஆன மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. 2016 நவம்பர் 31 திகதிக்கு முன்னர் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 மே 19 திகதியிலும் வேலை பூர்த்தி செய்யப்படாததுடன் அக் கருத்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 247,720 ஆன நிர்மானப் பொருட்கள் கேட்போர் கூடத்தில் இடப்பட்டிருந்தன.

### 3.7 கழிவு பொருள் முகாமை

மத்திய மாகாண சுற்றாடல் அமைச்சிலிருந்துகிடைத்தரூபா 3,487,828 ஆன உதவியின் கீழ் 2010 ஆண்டின் போது மூடப்பட்ட அரைவாய்வு குழி முறையில் செய்யப்பட்ட கால்வாய் மற்றும் குப்பைகளை தெரிவதற்காக கொட்டில்லொன்று நிர்மானிக்கப்பட்டிருந்ததுடன்,ரூபா 5,069,140 பெறுமதியான இயந்திரம் மற்றும் உபகரணங்களும் கிடைத்திருந்தன. பிரதேச சபையின் 5 தொழிலாளர்கள் மற்றும் ட்ரக் வண்டி பயன்படுத்தப்பட்டு சேர்க்கப்படும் உக்கலடையும் கழிவுகள் குழியில்இடப்பட்டு உக்கலடையாத கழிவுகளிலிருந்து விற்கப்படக் கூடிய பொருட்களை வேறாக்கி ஏனைய பொருட்கள் குழியில் இடப்பட்டு தீமூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நிர்மானிக்கப்பட்ட கால்வாயில் ஆலம் கூடுதலாகவும் கொட்டியின் கூரை கட்டையாகவும் காணப்பட்டதால் இயற்கை பசளையை வெளியில் எடுப்பதற்கு பகோ இயந்திரத்தை உபயோகிக்க முடியாததன் காரணமாக இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 8 வருடங்கள் கடந்த போதும்பசளை உற்பத்தி மூலம் வருமானம் ஈட்டிக்கொள்ள முடியாதிருந்தது. இவ் இடத்திற்கு மின் வசதி பெற்றுக்கொள்ளலில் நிலவிய பிரச்சினை காரணமாக குப்பை கொட்டும் இயந்திரத்தை செயற்படுத்த முடியாமலிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்களிற்கிடையில், ஒதுக்கீடு மாற்றப்பட்டதன் பின்னரும் பாதீடு மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையில்,கனிசமான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லைஎன அவதானிக்கப்பட்டது.

(அ) 15 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 125,000 ஆன ஒதுக்கீட்டிலிருந்துஎவ்வித செலவும் செய்யப்படாமல் முழு ஒதுக்கீடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 27 செலவின விடயங்களின் தேறிய ஒதுக்கீடு மற்றும் உள்ளவாறான செலவுகளுக்கு இடையில் 29 சதவீதம் முதல் 97 சதவீதம் வரை வீச்சளவானவிலகல்கள் நிலவியது.

(இ) 8 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களிற்கிடையில் 8 சதவீதம் முதல் 57 சதவீதம் வரைவீச்சளவானவிலகல்கள் நிலவியது.

### 4.2 வருடாந்தபெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்கான பெறுகைகள்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டில் சபையின் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமை குழு செயளாற்றுகை**

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டினுள்ஒருகணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்றுகூடல் மாத்திரம் நடத்தப்பட்டிருந்தது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையானசொத்துக்கள்

(ஆ) கணக்கீடு.

(இ) வாகன கட்டுப்பாடு

(ஈ) வருமான கட்டுப்பாடு

(உ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்